[8th August 1966

தொழிற்சாலை அமைக்க கைத்தொழில் வர்த்தகத்துறை உதவி நெறியாளர் ஏதேனும் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறாரா ?

(இ) ஆம் எனில், மேற்கூறிய இடங்களில் எங்கு அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

(உ) எப்போது அமைக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) No.

(b) & (c) Do not arise.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சிறிய சிறிய தொழில்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தருவோம் என்று சொல்கிற நம் சர்க்கார் போல்ட், நட்டுக்குக் கூட வசதி இல்லை என்று சொல்கிறார்களே, என்ன காரணம் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போல்ட், நட்டுக்குக் கூட வசதி இல்லை என்று சொல்லவில்லை. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லி இருக்கிறேன்.

இலங்கையில் இருந்து குடி பெயர்ந்தோர்

*** 210 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடந்த 12 ஆண்டுகளாக இலங்கையிலிருந்து வந்து வேலை கோரிப் பதிவு செய்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் வேலை பெற்றிருப்பவர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) According to the current practice, the Employment Exchanges neither identify the Ceylon repatriates separately at the time of registration nor maintain separate statistical data regarding them. As such only the following particulars are available :

1. Number of Ceylon repatriates on Live Registers of Employment Exchanges in the State on 1st April 1965 40
2. Number of Ceylon repatriates registered during the period from 1st April 1965 to 31st March 1966 134
3. Total number of Ceylon repatriates on the Live Registers of Employment Exchanges in the State as on 31st March 1966 79

(b) 8 persons were placed in employment during the period from 1st April 1965 to 31st March 1966.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விவரங்களைப் பார்த்தால் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகவும், வேலை பெற்றவர்களின்

8th August 1966]

எண்ணிக்கை மிகக் குறைவாகவும் இருப்பது தெரியும். இலங்கை யில் இருந்து வந்திருக்கக்கூடியவர்களுக்கு வேலை அளிப்பதில் வயது வரம்புச் சலுகை அளிக்கப்படுகிறதா, கல்வி வரம்புச் சலுகை அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சலுகை இருக்கிறது. என்ன, என்ன இருக்கிறது என்பதைப்பற்றித் தனியாகக் கேள்வி வேண்டும்.

அரிஜன மாணவர்களுக்குப் பயிற்சி

* 71 கேள்வி.—திரு. வை. சங்கரன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் அரசாங்க அலுவலர் தேர்வுக் கழகம் நடத்தும் தேர்வுகளுக்குச் செல்லும் ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு அதற்கான பாடங்களைக் கற்பிக்கக் கல்வி நிலையங்களைத் தொடங்கும் திட்டம் உண்டா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்.

(இ) சபை முன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன்: பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரிட்சைக்குப் பயிற்சி அளிப்பதற்காக 30 பேர்களுக்குச் சென்னையிலும், திருச்சி யிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்த முப்பது பேர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார் கள்? இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குப் போாசிரியர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்?

கனம் திரு. பூ. கக்கன்: இரண்டாவது கிரேட், மூன்றாவது கிரேடுக்கு யார் யார் தகுதி பெற்றிருக்கிறார்களோ அவர்கள் அப்ளை செய்து கொள்ளவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி: பின் தங்கிய வகுப்பு மாணவர் களுக்கும் இந்தப் பயிற்சி அளிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: தற்சமயம் ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் இவர்களுக்குப் பயிற்சி அளிப்பது தான் திட்டம்.

* 211 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Madras Government have submitted any scheme to the Union Government to set up a pre-examination centre in the State to train Scheduled Castes and Scheduled Tribes candidates for recruitment to the Indian Administrative and Police Services; and

(b) if so, the details thereof?

---

a Printed as Appendix II on pages 876–878.